மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: படுகைப் பாலம் கட்டும் பணி 1974 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் முடிவடைந்தது.

சுப்பிரமணியபுரம் அருகே மேம்பாலம்

*649 வினு.— திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுரை சுப்பிரமணியபுரம் அருகில் கட்டப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலத்தின் மொத்த மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மொத்த மதிப்பீடு ரூ. 36 லட்சம்.

Bridge across Gadilam river

*650 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minist er for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that a bridge across river Gadilam near Ulund urpet has been opened recently; and

(*b*) if so, the expenditure incurred therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) ரூ. 5,201-84.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தக் கடிலம் பாலத்தை திறக்க ஏற்கெனவே ஒரு முறை தேதி முடிவு செய்யப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டதா? ஆம் எனில் அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முதல்வர் அவர்களுக்கு உடல் நலம் இல்லாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டது.

டீசல் விசையேற்றங்கள் வாங்கக் கடன்கள்

*651 வினு.— திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் மத்திய அரசு நிதி உதவியுடன் விவசாயிகளுக்காக டீசல் என்ஜின் வழங்கும் திட்டம் அமுலில் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் கீழ் 1974-75 நிதியாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை விவசாயிகளுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது?

(உ) எந்த அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) & (உ) & 1974-75 நிதியாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 15-2-1975 வரை 364 டீசல் விசையேற்றங்களுக்கு ரூ. 13.69 லட்சம் கடன் தொகை அளிக்கப்பட்டது.

Sick textile mills

*652 *Q.*—THIRU N. K. PALANISAMY and THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of India have proposed to take over the sick textile mills including those run by the Tamil Nadu Textile Corporation; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்த 12 பஞ்சாலைகள் உள்பட இத்தேசத்திலுள்ள 103 நலிந்த பஞ்சாலைகளை இந்திய அரசு நலிந்த பஞ்சாலைகளை அரசுடைமையாக்குவதைக் குறித்த சட்டத்தின் கீழ் 1-4-1974 முதல் அரசுடைமையாக்கியுள்ளது.

(இ) இந்த ஆலைகளின் மேல் முழு உரிமை பெற்ற தேசிய பஞ்சாலைக் கழகம் இம்மாநிலத்திலுள்ள 9 ஆலைகளை தனது இணைக் கழகத்திற்கு மாற்றியுள்ளது. எஞ்சிய 3 ஆலைகள் தற்போது தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்தின் நிர்வாகத்தில் இருக்கும்.

திரு. என். கே. பழனிசாமி : இந்த ஆலைகள் நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடியவற்றைப் பொறுத்து ரிப்பேர் செலவு போன்றவற்றை நம்முடைய சர்க்காரே செய்து வந்திருக்கிறது. இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய ஆலைகள் பூராவும் நம்முடைய சர்க்கார் வசம் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்று மத்திய சர்க்காரை நம்முடைய சர்க்கார் வற்புறுத்தியதா ? மத்திய சர்க்கார் என்ன சொல்லிற்று ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் சேர்ந்து பணம் போட்டு நிர்வாகம் நடைபெற்று வருகிறது. நாம் 49 சதவிகிதம், அவர்கள் 51 சதவிகிதம். ஆலைகளை எடுக்கச் சொன்னதே நாம்தான். ஆகவே, நாம் அவர்களிடத்திலே கூறியது—இப்போது எப்படி நிர்வாகம் இருக்கிறதோ அதே முறை நீடிக்கவேண்டும் என்று கேட்டபோது அகில இந்திய அளவில் அது முடியாது என்று தெரிவித்தார்கள். அதற்குப் பின்னல் புதிய தொழிலமைச்சர் வந்தவுடனே அவரிடத்தில் பேச்சு